செய்தி வெளியீடு எண் :28 நாள் : 16.07.2021

**தேனி மாவட்டம்**

**உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் மனுதாரர்களை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் குறித்து, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்:-**

-------------

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை பேரூராட்சிப் பகுதிகளில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பாக மனுதாரர்களை நேரில் சந்தித்தும், கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாகவும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.07.2021) ஆய்வு மேற்கொண்டு, கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்காத தேநீர் கடை மற்றும் தனியார் பேருந்திற்கு அபராதம் விதித்தும் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன்கருதி, அவர்களின் பல்வேறு கோரிக்கை தொடர்பான மனுக்களுக்கு 100 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தை அறவித்து, அதற்கென தனித்துறையை உருவாக்கி, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

பொது மக்களின் கோரிக்கைகளைப் பொறுத்தவரை தகுதியுடைய மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்டு வருகிறது. முடியாதவற்றிற்கு என்ன காரணத்தினால் கோரிக்கை நிறைவேற்ற இயலவில்லை என்ற அதற்கான தெளிவான காரணம் அளித்திடவும், அவர்கள் தொடர்ந்து கோரிக்கைகள் குறித்து மனு செய்வதைத் தவிர்க்கும் வகையில், மாற்று வழியில் அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள வழிகாட்டுதல்களை வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, இதுவரை 10,322 மனுக்கள் பெறப்பட்டு, தகுதியான 2,765 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டும், 6,111 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டும், இதர மனுக்கள் பரிசீலனையிலும் உள்ளது. அதில், பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மட்டும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, இதுவரை 52 மனுக்கள் பெறப்பட்டு, தகுதியான 27 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டும், 17 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டும், இதர மனுக்கள் பரிசீலனையிலும் உள்ளது.

இதில், பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட தென்கரை பேரூராட்சிப் பகுதியில், தள்ளுபடி செய்யப்பட்டுள்ள மனுக்களின் மனுதாரர்களை இன்றைய தினம் நேரில் சந்தித்து, மனுதாரரின் கோரிக்கையின் உண்மை தன்மை தொடர்பாகவும், அம்மனுவின் மீது மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்புகள் குறித்தும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது அப்பகுதி மக்கள் சாதிச்சான்றிதழ் மற்றும் இலவச வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் அளித்தனர். இதனை பரிசீலனை செய்து உடன் நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இது போன்று புதிதாக வரப்பெறும் மனுக்கள் மீதும் தனிக் கவனம் செலுத்தியும், தகுதி வாய்ந்த மனுக்களுக்கு உரிய அரசின் பயன்கள் கிடைத்திட உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, தென்கரை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்கள் மட்டுமின்றி அப்பகுதியில் வந்த தனியார் பேருந்தில் பயணம் செய்த பயணிகளிடம் கொரோனா விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்து, அரசின் கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றுவது குறித்தும், முககவசங்கள் அணிந்திடவும், சமூக இடைவெளியினை முறையாக பின்பற்றிடவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இதில் முறையாக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றிடாத தேநீர் கடை மற்றும் தனியார் பேருந்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அபராதம் விதிக்கப்பட்டது. அரசால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை சரிவர கடைபிடித்து, கொரோனா தொற்று நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அப்பகுதி பொதுமக்களிடம் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, பெரியகுளம் வட்டம், தென்கரை குறுவட்ட அலுவலர் குடியிருப்பு மற்றும் அலுவலகம் திறப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.வீ. முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ். சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுகளின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் க. ரமேஷ், பெரியகுளம் சார் ஆட்சியர் செ.ஆ.ரிஷப், இ.ஆ.ப., உதவி இயக்குநர் (நிலஅளவை) இரா.ஜெயச்சந்திரன், வட்டாட்சியர் கிருஷ்ணகுமார், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**